வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்—நாராயணசாமி

தேதி 21.6.2025 நேரம் மாலை 6.10 மணி

தலைப்புச் செய்திகள்

11-ஆவது சர்வதேச யோகா தினம் இன்று இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது..

உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே யோகாவிற்கான வரவேற்பு அதிகரித்து உள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

புதுச்சேரியில் இன்று சர்வதேச யோகா தின விழா கடற்கலை சாலை மற்றும் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி அரசு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் உதவியாளர் பணியிடங்களுக்கான 2-ஆம் நிலை தேர்வு நாளை நடைபெற உள்ளது.

யோகா

11-ஆவது சர்வதேச யோகா தினம் இன்று இந்தியா மற்றும் வெளிநாடுகளில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.. பிரதமர் திரு நரேந்திர மோடி விசாகபட்டினம் ராதா கிருஷ்ணன் கடற்கரை பகுதியில் நடைபெற்ற யோகா தின விழாவில் கலந்து கொண்டு யோகா பயிற்சியில் ஈடுபட்டார். முன்னதாக நிகழ்ச்சியில் பேசிய பிரதமர் யோக கலை அனைத்து மக்களையும் அமைதிப் பாதையில் வழி நடத்துவதாக தெரிவித்தார். தற்போதைய மற்றும் எதிர்கால சந்ததியினருக்கு மகிழ்ச்சியான, ஆரோக்கியமான எதிர்காலத்தை பாதுகாக்க உலகம் எவ்வாறு ஒன்றிணைகிறது என்பதனை நினைவூட்டும்“ வகையில் உலக நாடுகள் யோகா பயிற்சியில் ஈடுபட்டு வருவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறினார்.

யோகா

இந்தியாவின் பாரம்பரியக் கலையான யோகாவை அங்கீகரிக்க வேண்டுமென்று பிரதமர் திரு நரேந்திர மோடி விடுத்த கோரிக்கையை ஏற்று ஜுன் 21-ஆம் தேதியை சர்வதேச யோகா தினமாக ஐக்கிய நாடுகள் சபை அங்கீகரித்தது. அந்த வகையில் 11-ஆவது சர்வதேச யோகா தினத்தை முன்னிட்டு இன்று நாடு முழுவதும் 10 லட்சம் இடங்களில் யோகா சங்கம நிகழ்ச்சிகள் நடைபெற்றன. ஒரே பூமி-ஒரே ஆரோக்கியத்திற்கான யோகா என்பதே இந்த ஆண்டு யோகா தினத்தின் கருப்பொருளாகும். சர்வதேச யோகா தினத்தை ஒட்டி, நினைவு தபால் தலையையும் திரு நரேந்திர மோடி வெளியிட்டார்.

நவீன ஆய்வுகள் மூலம் யோக அறிவியலை வலுப்படுத்துவதற்கான ஆராய்ச்சிகளை நாட்டின் முக்கிய மருத்துவ நிறுவனங்கள் ஈடுபட்டுள்ளதாக பிரதமர் கூறினார். யோகாசனத்துடன் சான்றளிக்கப்பட்ட சிகிச்சை முறையையும் இந்தியா ஊக்குவித்து வருவதாகவும், புதுடெல்லியில் உள்ள எய்ம்ஸ் மருத்துவமனையில் இத்தகைய சிகிச்சை வெற்றிகரமாக அளிக்கப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார். இதயம் மற்றும் நரம்பியல் பாதிப்புகள் குறித்து சிகிச்சை அளிப்பதில் யோகா முக்கிய பங்கு வகிக்கிறது என்றும், பெண்களின் உடல் மற்றும் மனம் ஆரோக்கியமாக திகழ யோகா உதவுகிறது என்றும் பிரதமர் கூறினர்.நவீன மருத்துவத்தில் யோகா இடம் பெற வேண்டும் என்ற இந்தியாவின் திட்டம் ஒட்டு மொத்த உலக மக்களின் நலனை நோக்கமாகக் கொண்ட ஒருங்கிணைந்த முயற்சி என்றும் திரு மோடி குறிப்பிட்டார். குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு, டேராடூனில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்றுப் பேசினார். யோகாவிற்கு உலகில் வரவேற்பு அதிகரித்து உள்ளதாக திருமதி திரவுபதி முர்மு கூறினார். உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா குஜராத் மாநிலம் அகமதாபாத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் பங்கேற்றார். புதுடெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சிகளில் மத்திய அமைச்சர்கள் திரு ராஜ்நாத் சிங், திரு ஜேபி நட்டா, திருமதி நிர்மலா சீதாராமன் திரு தர்மேந்திர பிரதான உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

சென்னை தாம்பரம் தேசிய சித்த மருத்துவ நிறுவனத்தில் நடைபெற்ற யோகா தின நிகழ்ச்சியில் மத்திய தகவல் ஒலிபரப்புத் துறை இணை அமைச்சர் டாக்டர் எல் முருகன், கலந்து கொண்டார். நம் நாட்டின் தொன்மையான யோக கலை 170-க்கும் மேற்பட்ட உலக நாடுகளில் பின்பற்றப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

*ஆபரேஷன் சிந்து*

ஈரானின் வான் பரப்பு மூடப்பட்டுள்ளதால் அந்நாட்டின் அண்டை நாடான துர்க்மெனிஸ்தானில் இருந்து சிறப்பு விமானம் மூலம் நேற்று இரவு 290 இந்தியர்கள் புதுடெல்லி அழைத்து வரப்பட்டனர். அண்டை நாடுகளுக்கு உதவும் நல்லெண்ணத்துடனும் மனிதாபிமானத்துடனும் டெக்ரானில் உள்ள இந்திய தூதரகம் ஆபரேஷன் சிந்து நடவடிக்கையின் ஒரு பகுதியாக ஈரானில் சிக்கித் தவிக்கும் நேபாளம், மற்றும் இலங்கை குடிமக்களை ஈரானில் இருந்து அழைத்து வரும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

புதுச்சேரி கடற்கரை சாலை, காந்தி திடலில் இன்று காலை நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவினை துணைநிலை ஆளுநர் திரு. கைலாஷ்நாதன், முதலமைச்சர் திரு.ரங்கசாமி ஆகியோர் தொடக்கி வைத்தனர். இதில் மாணவர்கள், யோகா பயிற்சியாளர்கள், பொது மக்கள் உட்பட 4 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு யோகா பயிற்சி செய்தனர். நிகழ்ச்சியில் கலந்து கொண்டு உரையாற்றிய முதலமைச்சர் திரு ரங்கசாமி முனிவர்களால் நமக்கு வழங்கப்பட்ட யோக கலையை உலகம் முழுவதும் அறிய செய்ததில் பிரதமர் திரு நரேந்திர மோடி வெற்றி கண்டுள்ளார் என்று கூறினார். இதுபற்றி அவர் மேலும் கூறுகையில்

இதேபோல், காரைக்காலில் நடைபெற்ற யோகா தின விழாவில் குடிமை பொருள் வழங்கல் மற்றும் நுகர்வோர் விவகாரங்கள் துறை அமைச்சர் திரு. P.R.N. திருமுருகனும், ஏனாமில் நடைபெற்ற சர்வதேச யோகா தின விழாவில் புதுச்சேரிக்கான டெல்லி சிறப்பு பிரதிநிதி திரு. மல்லாடி கிருஷ்ணாராவும் நிகழ்ச்சியை தொடக்கி வைத்தனர். நூற்றுக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள், அரசு அதிகாரிகள் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றனர்.

*புதுச்சேரி-நிலையம்*

புதுச்சேரி அகில இந்திய வானொலி நிலையத்திலும் யோகா தின விழா கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு, நிலையத்தின் நிகழ்ச்சி பிரிவு தலைவர் மயிலாடுதுறை திரு. த.செந்தில்குமார் தலைமையேற்றார், பொறியியல் பிரிவின் உதவி பொறியாளர் திருமதி. ஆர். ஜெயந்தி, நிகழ்ச்சி அமைப்பாளர் திருமதி. ஏ.பி. எலிசபெத், செய்திப்பிரிவு தலைவர் திரு. பிபின் எஸ். நாத், உட்பட நிலைய அதிகாரிகள், அறிவிப்பாளர்கள்,

தொகுப்பாளர்கள், ஊழியர்கள் கலந்து கொண்டு யோகா பயிற்சி மேற்கொண்டனர். முன்னதாக விசாகப்பட்டினத்தில் பிரதமர் திரு. நரேந்திரமோடி பங்கேற்ற யோகா தின விழா நிகழ்வுகள் தொலைகாட்சி திரையின் வாயிலாக நேரடியாக நிலைய அரங்கில் ஒளிபரப்பப்பட்டது.

தேர்வு

புதுச்சேரி அரசு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் உதவியாளர் பணியிடத்துக்கான 2-ஆம் நிலை தேர்வு நாளை ஞாயிற்றுக்கிழமை புதுச்சேரியின் 4 பிராந்தியங்களிலும் காலை 10 மணி முதல் மதியம் 12 மணி வரை நடைபெற உள்ளது. தேர்வர்கள் காலை 9.30 மணிக்குள் தேர்வு மையத்தில் இருக்க வேண்டும் என்றும் அதற்கு பின் வருவோருக்கு அனுமதி மறுக்கப்படும். கருப்பு வண்ண பால் பாயிண்ட் பேனா, நுழைவுச் சீட்டு மற்றும் அசல் அடையாள அட்டை மட்டுமே கொண்டு வர வேண்டும். இதர பொருட்களுக்கு அனுமதியில்லை என்றும் அத்துறையின் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

காரைக்கால் மாவட்டத்தில் சரக்கு ரயில் போக்குவரத்து துவங்கப்பட்டுள்ளதால், 3 மையங்களில் நடைபெற உள்ள இத்தேர்வில் பங்கேற்போர் தேர்வு மையங்களை அடைய காலதாமதம் ஏற்பட வாய்ப்புள்ளதால் மாற்றுப் பாதையை பயன்படுத்தி சரியான நேரத்தில் தேர்வு மையத்தை அடையுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

*மக்கள் மன்றம்-காரைக்கால்*

புதுச்சேரி காவல் துறை சார்பில் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் பொது மக்களின் புகார்களை கேட்டறிந்து தீர்வளிக்கும் மக்கள் மன்றம் இன்று காரைக்கால் திருப்பட்டினம் காவல் நிலையத்தில் நடைபெற்றது. 30-க்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டு நகை, பணம்,நிலம் உள்ளிட்ட மோசடிகள் குறித்த புகார்களை தெரிவித்தனர். சென்ற வாரங்களில் பெறப்பட்ட புகார்களின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் மூலம் தீர்வு காணப்பட்டதற்கு நன்றியும் தெரிவித்துக் கொண்டனர். கொடுக்கப்பட்ட புகார்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு தீர்வு காணப்படும் என முதுநிலை காவல் கண்காணிப்பாளர் திருமதி லட்சுமி சவ்ஜன்யா நம்பிக்கை தெரிவித்தார்.

கேரவன்-டாக்கீஸ்

இந்திய ராணுவத்தில் சேர்வதற்கான வாய்ப்புகள் குறித்து நகர்புற மற்றும் கிராமப்புற இளைஞர்களை ஊக்குவிக்கவும், தெரிவிக்கவும், வழிகாட்டவும் காரைக்கால் மாவட்டத்தை உள்ளடக்கிய ஒரு சிறப்பு தொலை தொடர்பு திட்டத்தை ராணுவம் தொடங்கி உள்ளது. கேரவன் டாக்கீஸ் என்ற சிறப்பு விளம்பர வேன் வரும் 23-ஆம் தேதி முதல் ஜூலை ஒன்றாம் தேதி வரை காரைக்காலில் உள்ள கல்வி நிறுவனங்களுக்குச் சென்று இந்திய ராணுவத்தில் தொழில் வாய்ப்புகள், இளம் ஆர்வலர்களின் சந்தேகங்கள் குறித்த விளக்கம் உள்ளிட்டவை பற்றிய உண்மையான தகவல்களை தெளிவுபடுத்த உள்ளது. தகுதி மற்றும் ஆர்வம் உள்ள இளைஞர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு காரைக்கால் மாவட்ட ஆட்சியர் அலுவலக செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஈட்டி எறிதல்

பாரீசில் நடைபெற்ற பாரீஸ் டைமண்ட் லீக் ஈட்டி எறிதல் போட்டியில் இந்திய வீரர் நீரஜ் சோப்ரா 88. 16 மீட்டர் தூரம் எறிந்து பட்டத்தை வென்றார்.

**11-ஆவது சர்வதேச யோகா தினம் இன்று இந்தியா மற்றும்** வெளிநாடுகளில் உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது..

உலகம் முழுவதும் உள்ள மக்களிடையே யோகாவிற்கான வரவேற்பு அதிகரித்து உள்ளதாக குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு கூறி உள்ளார்.

புதுச்சேரியில் இன்று சர்வதேச யோகா தின விழா கடற்கலை சாலை மற்றும் பல்வேறு இடங்களில் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி அரசு பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறையில் உதவியாளர் பணியிடங்களுக்கான 2-ஆம் நிலை தேர்வு நாளை நடைபெற உள்ளது.

---------------------------